# ONGC PUBLIC SCHOOL
# NERAVY - KARAIKAL

ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி வளாகத்தில் 15/12/2022 இன்று மதியம் 1.00மணி அளவில் பாரதிய மொழிகள் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியில் சிறப்பு விருந்தினராக தாளாளர் திரு கண்ணன் அவர்கள் முன்னிலை வகித்தார். ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியின் கல்வி இயக்குநர் திரு. பொன்ராமன் அவர்களும், ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியில் முதல்வர் திரு. ராஜவேலு அவர்களும், ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியின் துணை முதல்வர்திரு எட்வின் சாமுவேல் அவர்களும், எம் பள்ளியின் இருபால் ஆசிரியர்களும் மற்றும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.




நிகழ்ச்சியின் தொடக்கமாக பள்ளியின் தாளாளர் குத்துவிளக்கினை ஏற்று வைத்து ,தமிழ்த்தாய், விவேகானந்தர் படங்களுக்கு மலர் தூவி இறை வாழ்த்துடன் விழாவானது இனிதேதொடங்கியது. இடைநிலைப் பொறுப்பாசிரியர் திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் வரவேற்புரையினை வழங்கினார்.

பள்ளியின் முதல்வர் திரு ராஜவேலு அவர்கள் தமது சிறப்புரையில் மொழி என்றால் என்ன? அவற்றின் சிறப்பினையும் மிக எளிமையாக மாணவர்களுக்கு புரியும் வகையில் எடுத்துக் கூறினார். ஒவ்வொரு மாணவர்களும் மொழி பற்றோடு இருக்க வேண்டும் என்று கூறினார்.




நிகழ்ச்சியின் தொடக்கமாக மலையாள மொழியில் ஓணம் விழாப்பாடல் மாணவர்களால் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் மொழியின் சிறப்புகள் என்ற தலைப்பில் எட்டாம் வகுப்பு மாணவன் பிரஜன் தமிழ் மொழியின் சிறப்பினை பற்றி பேசினான். இதனைத் தொடர்ந்து இந்தி மொழியின் தனித்துவம் என்ற தலைப்பில் கவிதையை வழங்கினால் எட்டாம் வகுப்பு மாணவி காஷ்வி அவர்கள் அடுத்ததாக சமஸ்கிருத மொழியில் தெனாலி ராமனின் புத்திசாலித்தனம் என்ற தலைப்பில் குறு நாடகத்தை மாணவர்கள் நடித்துக் காட்டினர்.






பிறகு எட்டாம் வகுப்பு மாணவர்கள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு பிறமொழிக் கலப்பின்றிப் பேசும் குழு விவாதம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கன்னட மொழியின் சிறப்பினை கதையாக கூறினான் 5 ஆம் வகுப்பு மாணவன் கவுஷ்துப்பீடே, இந்தியாவின் இரண்டாவதாக அதிகம் பேசப்படும் மொழி தெலுங்கு ஆகும் என்பதை வலியுறுத்தி தெலுங்கின் சிறப்பினை உரையாடலால் விளக்கினார்கள் எம் பள்ளி மாணவர்கள் சிறப்பினையும், திருக்குற்றால நாதரைக் கண்டு அவர் யாரென அறியாமலேயே அவர் மீது காதலை நடனத்தின் வாயிலாக காண்பவர் கண்களுக்கு விருந்தளிக்க வருகிறார்.




எம் பள்ளி மாணவிகள் ஔன்ஜிசி பொதுப்பள்ளியின் கல்வி இயக்குநர் திரு. பொன்ராமன் அவர்கள் தமது சிறப்புரையில் இந்திய திருநாட்டில் அனைத்து வகையான வளங்களும் நிறைந்து இருப்பதாகவும் இந்தியர்களாகிய நாம் அனைவரும் இந்திய பாரம்பரியத்தை அனைவரும் உணர்ந்து ஒருசேர செயல்பட வேண்டும் என்று

கூறினார் அப்பொழுது இந்தியாவின் நாட்டு வளமும் கலாச்சாரமும் மேம்படும் என்று கூறினார்.




நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் பள்ளியின் இடைநிலை பொறுப்பாசிரியர் திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் தொகுத்து வழங்க விழாவானது தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது